1973 மார்ச் 26]

Government has to see that the amount is spent for the purpose for which it was allotted ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

ஊராட்சிகளை பேரூராட்சிகளாக்கல்.

* 509 வினா.—திரு. டி.வி. சம்பத் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) ஐயாயிரம் மக்கட் தொகையுள்ள திருவெண்காடு, பெருந் தோட்டம், செம்பனார்கோயில் ஆகிய ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : திருவெண் காடு ஊராட்சி தனது 26—10—1972-ந்தேதிய 5-வது எண்ணுள்ள தீர்மானத்தில் அதனை பேரூராட்சியாக மாற்ற வேண்டுமெனக் கோரி யுள்ளது. இதுபற்றிய பொருள் பரிசீலனையில் உள்ளது. மற்ற இரண்டு ஊராட்சிகளிடமிருந்து பேரூராட்சியாக மாற்ற வேண்டுமென கோரிக்கை ஏதும் அரசிற்கு வரவில்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, செம்பனார்கோயில், பரசலூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளையும் ஒன்றாக இணைத்து பேரூராட்சி யாக்க வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பே அரசுக்கு ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இரண்டு ஊராட்சிகளையும் ஒன்றாக இணைப் பதின் காரணமாக ஒரு பகுதியைச் சேர்ந்த தலைவர் பேரூராட்சித் தலைவராக வரமுடியாது என்ற எண்ணத்தினால் அவரும் அவரிடம் செல்வாக்கு உள்ளவர்களும் அப்படி ஒன்றாக ஆக்கக்கூடாது என்று எண்ணுகிறார்கள். அதைப் பொருட்படுத்தாமல் இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரு பேரூராட்சியாக ஆக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா சூழ்நிலைகளை யும் ஆராய்ந்துதான் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டு ஊராட்சிகளை ஒன்றாக இணைத்து பேரூராட்சியாக்குவதற்கு அங்குள் ளவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்களா என்பதை அறியவேண்டியிருக் கிறது. அதை பேரூராட்சியாக்குவதற்கான சூழ்நிலையைப் பெற்றிருக் கிறதா என்பதையும் ஆராயவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த ஊராட்சிகளிடமிருந்து அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத திற்கு வரவில்லை. திருவெண்காடுபற்றித்தான் வந்திருக்கிறது.

[1973 மார்ச் 26

திரு. கு. காமாட்சி : பேரூராட்சியாக்குவதற்கு எல்லாவிதமான தகுதிகள் இருந்தாலுங்கூட சில இடங்களிலே சில ஊராட்சித் தலைவர்கள் தங்களுடைய அதிகாரம் நிர்வாக அதிகாரியிடம் போய்விடுமே என்ற எண்ணத்தால் அதற்குத் தடையாக இருந்து வருகிறார்களே, அதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சித் தலைவர்கள் தடையாக இருந்தாலும் உறுப்பினர்கள் எல்லாம் ஏகோபித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் அது அந்த மன்றத்தினுடைய ஏகோபித்த எண்ணமாக அமையும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருவெண்காடு ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றுவதற்கு அரசு எப்பொழுது நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. திருவெண்காட்டில் 1971-ஆம் ஆண்டு, சென்ஸஸ் கணக்குப்படி 5,562 மக்கள் இருக்கிறார்கள் என்றும், சராசரி வருமானம் 34 ஆயிரம் ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்து கிராம வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்து ஆகியவை கிடைத்த பிறகுதான் முடிவு செய்யவேண்டும். ஆகவேதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சியாக்குவதற்கு 5 ஆயிரம் மக்கள் தொகை தேவை, தீர்மானம் தேவை. இன்னும் என்ன என்ன அடிப்படைகள் இருந்தால் பேரூராட்சியாக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்களுக்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் 10 ஆயிரத்துக்குக் குறையாமல் மேலே இருக்கவேண்டும். மேலும் பேரூராட்சியாக அமைப்பதற்கான சூழ்நிலைகள்—மற்றவைகள்—இருக்க வேண்டும். பேரூராட்சி என்றால் குறைந்தது நிர்வாகச் செலவு 21 ஆயிரம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே 10 ஆயிரம் ரூபாய் வருமானம் இருக்கவேண்டுமென்று சொன்னால் 21 ஆயிரம் ரூபாய் செலவு செய்யமுடியாது. ஆகவே 50 ஆயிரம் 40 ஆயிரத்துக்கு மேல் வருமானம் வந்தால்தான் நிர்வாகச் செலவு முதலியவற்றை ஈடுகட்டி மற்ற வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க முடியும். இப்படிப் பல்வேறு சூழ்நிலைகளை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படுகிறது.